# புராணங்களில் அறிவியல் சிந்தனைகள்

**முனைவர் சா.ஜெகன்அண்டோதிலக்**

உதவிப்பேராசிரியர்இ தமிழ்த்துறை, அன்னை கலை மற்றும் அறிவியல் கல்லூரிஇ கோவிலாச்சேரி.

தமிழ்மொழியில் படிக்கும் தோறும் இன்பம் அளிக்கக்கூடிய இலக்கியங்கள் பல உள்ளன. அவற்றுள் போற்றி வணங்கக் கூடியவை பக்தி இலக்கியம். வேத காலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களிடையே நிலவிய மரபு வழிக்கதைகளே பிற்காலத்தில் புராணங்களாக மலர்ந்தன. இலக்கியங்களில் பகுத்தறிவு பேசும் பல இலக்கியவாதிகள் புராணங்களை கட்டுக்கதைகள் எனவும் மூடநம்பிக்கைகள் எனவும் கருதி அவற்றை முற்றிலுமாக ஒதுக்கினர். புராணங்கள் பொய் கதைகளாக இருந்தாலும் அவை பல உலக கண்டுபிடிப்புகளுக்கு மூலக் கருவாக இருந்திருக்கின்றன. ஆராய்ச்சியாளர்கள் பலர் இக்கருத்தினை ஒப்புக் கொண்டுள்ளனர். அவ்வகையில் புராணங்களில் இடம்பெற்றுள்ள அறிவியல் தொடர்பான சிந்தனைகளை வெளிக்காட்டும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

### நேரடி ஒளிபரப்பு

உலகின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் விளையாட்டுப் போட்டிகள்இ கோயில் குடமுழுக்கு விழாஇ விருது வழங்கும் விழா போன்ற பல நிகழ்ச்சிகளை தொலைக்காட்சிகள் இன்று நேரடியாக ஒளிபரப்புகின்றன. இந்நேரடி ஒளிபரப்பானது செயற்கைக் கோளின் மூலம் நடைபெறுகிறது. இந்த விஞ்ஞான வினோதத்தை நாம் வீட்டில் இருந்தபடியே அனுபவித்து வருகிறோம். நேரடி ஒளிபரப்பு நிகழ்வதைப் போன்ற காட்சிகள் நமது புராணங்களில் இடம்பெற்றுள்ளன.

உமாதேவியார் திருமணத்தைக் காண்பதற்காக வானுலகம்இ நிலவுலகம்இ பாதாள உலகம் எனும் மூவுலகத்தில் உள்ளவர்களும் இமய மலையில் கூடியமையால் வடதிசை தாழ்ந்து தென் திசை உயர்ந்தது. மக்கள் முனிவர், தேவர், இந்திரன், நான்முகன், திருமால் எனும் வரிசையில் இந்நிகழ்ச்சி ஒருவருக்கொருவர் கூறப்பெற்று இறுதியில் அயன், மால் இருவரும் இறைவனுக்கு உணர்த்தினர். சிவபெருமான் அருள் கூர்ந்து அகத்தியரை நோக்க அவர் வாய்பொத்திஇ செவிதாழ்ந்து தனக்குரிய பணி யாதென வினவினார். சிவபிரான் நம் திருமணத்தைக் காண வந்த மக்களின் பாரப் பளுவால் வடக்கு தாழ்ந்து தெற்கு உயர்ந்து விட்டது. அதனை சமன் செய்ய நீ

தென் திசை செல்க என்று உத்தரவிட்டார். அகத்தியர் இறைவனிடம் யான் தென்திசை சென்றால் நும் திருமணக் காட்சியைக் காண முடியாதென வருந்தினார். சிவபெருமான் நம் திருமணக் காட்சியை நீ பொதிகை மலையில் காணலாம் என அருளினார். .அகத்தியர் தென் திசை வந்து பூமியைச் சமமாக்கி பொதிகை மலையில் திருமணக் காட்சியைக் கண்டார். இமய மலையில் நடந்த உமாமகேசுவரரின் திருமணக் காட்சியை அகத்தியர் பொதிகை மலையிலிருந்து நேரடியாக கண்டதைஇ

*மாலாகி இருக்கும் நமைப் பணிந்து*

*சிவவடிவாக்கி மகுடமென்னும்*

*தூலாதி ஆகமத்தால் பூசைசெய்து*

*நுவலு மணக்கோலங் காண்டி* 1

எனும் பாடல் வழி அறிய முடிகிறது.

### அறுவை சிகிச்சை

உடல் உறுப்புகளைத் தானமாக வழங்க முடியும் எனும் விஞ்ஞான உண்மையை உலகம் அறிந்தது கடந்த நூற்றாண்டில் தான். விஞ்ஞானத்தை விஞ்சும் சக்தி மெய் ஞானத்திற்கு உண்டு என்பதற்கு சான்று கண்ணப்ப நாயனாரின் வரலாறு.

கண்ணப்பர் திருகாளத்தி மலையில் அருள் கொண்டுள்ள சிவபெருமான் மீது அன்பு கொண்டிருந்தார். அவர் தனக்கே உரித்தான அன்புடன் தினமும் சிவபெருமானை வணங்கினார். புறத்தூய்மையில்லாமல் கண்ணப்பர் வழிபடுவதை கண்ட முனிவர்கள் முகம் சுளித்தனர்.

இறைவன் அவரின் அகத்தூய்மையை உலகுக்கு உணர்த்த திருவிளையாடலை அரங்கேற்றினார். சிவபெருமான் கண்ணப்பர் தம்மை வழிபட வரும் சமயம் பார்த்து வலது கண்ணில் உதிரம் வழியுமாறு காட்சி அளித்தார். அதனைக் கண்ட கண்ணப்பர் பதறித் துடித்தார்.

பச்சிலை மூலிகைகளைக் கசக்கி கண்ணில் ஊற்றினார். ஆனாலும் உதிரம் நிற்கவில்லை. கண்ணப்பர் உடனே அம்பெடுத்து தமது வலக் கண்ணை அவிழ்த்தெடுத்து இறைவனின் கண்ணில் பொருத்திய உடன் உதிரம் நின்றது. இங்ஙனம் கண்ணப்பர் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை செய்ததை,

***இதற்கினி என்கண் அம்பால்***

***இடந்தப் பின் எந்தையர்கண்***

***அதற்கிது மருந்தாய் புண்ணிர்***

***நிற்கவும் அடுக்கும் என்று***

***மதர்ந்தெழும் உள்ளத்தோடு மகிழ்ந்து***

***முன் இருந்து தங்கண்***

***முதற்சரம் அடுத்து வாங்கி***

***முதல்வன் தன் கண்ணில் அப்ப*** *2*

எனும் பாடல் வழி அறிய முடிகிறது. மனித உறுப்புகள் பழுதடைந்தால் அதற்கு பதிலாக இன்னொரு மனித உறுப்பை எடுத்துப் பொருத்துவதற்கு பதில் விலங்குகளின் உறுப்புகளைப் பயன்படுத்துவதற்கான ஆராய்ச்சி தற்சமயம் நடைப்பெற்று வருகிறது. ஆனால் இத்தகைய சிந்தனை புராணக் காலங்களிலேயே இருந்துள்ளது.

தக்கன் சிவபெருமானை அவமதித்து திருமால், அயன், இந்திரன் முதலிய தேவர்களை அழைத்து ஒரு பெரிய வேள்வியைச் செய்தான். தன் கணவரை அழையாமல் தந்தை வேள்வி செய்வது தவறு என்றுணர்ந்த தாட்சாயிணி தக்கனுக்கு அறிவுரை கூற எண்ணி அவ்வேள்விக்குச் செல்ல எண்ணினாள். சிவபிரான் தக்கனின் அகங்காரத்தை மனதில் கொண்டு தாட்சாயிணியைத் தடுத்தார். சிவபிரான் சொல்லை மீறி வேள்விக்குச் சென்ற தாட்சாயிணியை தக்கன் அவமதித்தான். இறைவன் கோபங் கொண்டு தக்கன் தலையை வெட்டினார். பின்னர் திருமால் முதலியோர் தக்கனை மன்னிக்குமாறு வேண்டினர். முனம் இரங்கிய இறைவன், தக்கனுடைய தலை எரிந்து விட்டதால் அவன் தலைக்குப் பதில் ஆட்டினுடையத் தலையைப் பொருத்தினார். இதனை,

***அத்தலை யூபந் தோறும்***

***அவரவர் முடி பெற்று உய்ந்தார்***

***நெய்தலை யூபத் தாடு***

***நிணத்தலை பறிபோய்த் தக்கன்***

***மைத்தலை யூப மேவி***

***வானவர் தலைமை தீர்ந்தான்*** 3

எனும் பாடல் அடிகள் வழி அறியமுடிகிறது.

**விமானம்**

விமானம் அல்லது வானூர்தி என்பது புவியின் வளிமண்டலத்தின் உதவியுடன் காற்றில் பறக்கக் கூடிய ஓர் உந்துப் பொறியாகும். இந்த விமானத்தை 1880 தொடங்கி 1903 ஆம் ஆண்டு ஆர்வில் ரைட் வில்வர் ரைட் என்னும் இரு உடன்பிறந்தோர் முதன் முதலாக கண்டு பிடித்தார்கள். ஆனால் புராணக் காலங்களிலேயே விமானங்கள் இருந்திருக்கின்றன. வாழ்நாள் முழுவதும் நன்மை மட்டுமே செய்து வாழ்ந்தவர்கள் இறந்துவிட்டால், அவர்களை அழைத்துச் செல்ல சிவகணங்கள் விமானத்தில் வருவார்களெனப் புராணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கருத்தினை,

***தலைமை யலூயர் வானமேன் மானமேல் தாவிச்*** *4*

*மாவாசத் தொடைமலரு மானமிசை செறிமலருங் 5*

*அங்க சாதனமாக வரும் பாவக் கடல் கடத்தும்*

*அங்கமாய்த் தோன்றியதால் வானில் ஒரு புட்பகத்தேர் 6*

*என்று இயமன் இயம்பிய காலெண்ண அரிய கணநாதர்*

*மன்றல் உயர் விமானமொடுத் தோன்றினார் மலர்மாரி 7*

எனும் பாடல் அடிகள் உறுதிப்படுத்துகின்றன. இவ்அடிகளில் விமானத்தைக் குறிக்க மான, புட்பகத்தேர், விமானம் ஆகிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**வேளாண்மை**

புராணக்கால மக்கள் வேளாண்மைத் தொழிலில் தெளிந்த அறிவினை உடையவர்களாக இருந்தனர். அவர்களின் வேளாண் நுட்பங்களை இன்றைய அறிவியல் அறிஞர்கள் பெரிதும் போற்றுகின்றனர். அவர்கள் உருவாக்கி போற்றி வந்த தொழில் முறைகள் இன்றும் பின்பற்றப்பட்டு வருகின்றன. உழவர்கள் எருதுகளையும் எருமைக் கிடாக்களையும் ஏரில் பட்டி நிலத்தை உழுது, அதில் முளைப்பு கட்டிய முளைப்பாரி நெல்லை விதைத்துள்ளனர். விதைத்த விதைகள் நாற்றுகளாகப் பருவமடைந்ததும் அவற்றை அவ்இடத்திலிருந்து பறித்தெடுத்து, வெவ்வேறு கற்றைகளாகக் கட்டி, சேற்றுமணம் கமழ உழுது, பக்குவப்பட்ட வயலில் நட்டுள்ளனர். இதனை,

*அரித்தலும் பெயர்த்து வெவ்வேறு*

*அமைத்தலும் அமைத்த நாறு*

*பிரித்தலும் கழனி தோறும்*

*பதித்தலும் புரியும் மள்ளர் 8*

*மொய்த்த சீர் நாறுநாறு முறைகண்டு சேறுநாறச்*

*சேய்தலை உழுது சீர்ப்பத் தெளிசெய்து 9*

எனும் பாடல் அடிகள் வழி அறிய முடிகிறது.

**கணிதம்**

நெல்லின் அளவைக் கண்ட உழவர்கள், விளைந்த நெல் முழுவதையும் வீட்டிற்கு எடுத்துச் செல்லாது, ஏனைய உழவர்கள், கூலி ஆட்கள் ஆகியோர்க்கு மனம் மகிழும்படியாக வழங்கினர்.

அதன் பின்னர் எஞ்சிய நெல்லை ஆறு பங்குகளாகப் பிர்த்து, அதில் ஒன்றை அரசனுக்கும் ஒன்றை ஆலயங்களுக்கும் கொடுத்து விட்டு மீதி பங்குகளைத் தங்களுடைய வீடுகளுக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இத்தகைய பங்கிடும் முறையிலிருந்து அக்கால மக்களின் கணித அறிவு நன்கு புலனாகிறது. இச்செய்தியை,

*பேறுகண்டு களிகூரக் களமர்*

*முதலோர்க்கு கவிபெருமை வேந்தற்கு*

*ஆறிலொன்று கடமை கொடுத்து*

*ஐந்திலொன்று தேவார ஆலயங்கட்கு ஈந்து*

*கூறுகொண்டு நெல்லொருபாற் கொழித்த*

*மணிமுத்தொருபாற் குவைகள் செய்வார் 10*

எனும் பாடல் வழி அறிய முடிகிறது. புராணங்களில் வானியியல், பொறியியல், மருத்துவம், தொடர்பியல், தாவரவியல், விலங்கியல் போன்ற அறிவியல் சிந்தனைகள் மலிந்து கிடக்கின்றன என்பதற்கு இக்கட்டுரை சான்றாக அமைகிறது.

**சான்றெண் விளக்கம்**

1திருக்குற்றாலத் தலபுராணம் பக்.320

2பெரியபுராணம் பா.822

3திருக்குற்றாலத் தலபுராணம் பக்.219

4மேலது பக்.326

5.மேலது பக்.210

6.மேலது பக்.275

7.மேலது பக்.446

8.மேலது பக்.26

9.மேலது பக்.14

10.மேலது பக்.29